தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை-06

ந.க.எண்.023758/பிடி2/இ1/2024. நாள். 23.04.2024

பொருள் பள்ளிக்கல்வி – நான் முதல்வன் திட்டம் – கல்வியாண்டு 2024-25 அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உயர் கல்வி வழிகாட்டி குழு (Career Guidance Cell) கூட்டுதல் / செயல்படுத்துதல் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – மாநில அளவிலான கருத்தாளர்கள் பயிற்சி மற்றும் மாவட்ட அளவிலான உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்குதல் – சார்ந்து.

பார்வை தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் கடித ந.க.எண்.680/L1/CG-4/MS/2023, நாள்.22.04.2024

2024-25 ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உயர் கல்வி வழிகாட்டி குழு (Career Guidance Cell) கூட்டுதல் / செயல்படுத்துதல் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள், மாநில அளவிலான கருத்தாளர்கள் பயிற்சி மற்றும் மாவட்ட அளவிலான உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்குதல் சார்ந்து பார்வையில் காண் தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில் 24.04.2024 முதல் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் உயர்கல்வி வழிகாட்டி குழுவின் முதல் திட்டமிடல் கூட்டம் நடத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இணைப்பு 4 –இல் குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டக் கருத்தாளர்களுக்கான பயிற்சி 29.04.2024 மற்றும் 30.04.2024 ஆகிய நாட்களில் Mother Teresa Women's University, Kodaikanal மற்றும் உயர்கல்வி வழிகாட்டுதல் குழுவிற்கான பயிற்சி 02.05.2024 முதல் 10.05.2024 வரை அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும் எனவும் பார்வையில் காண் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கொடைக்கானலில் நடைபெறும் மாவட்ட கருத்தாளர் பயிற்சிக்குரிய நபர்களை பணியில் இருந்து விடுவிக்கவும், மாவட்டங்களில் நடைபெறும் உயர்கல்வி வழிகாட்டுதல் குழுவிற்கான பயிற்சியினை நடத்திட அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முதன்மைக்கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும், தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள், உறுப்பினர் செயலர் கடிதத்துடன் பெறப்பட்ட இணைப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. இதில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றி உயர்கல்வி வழிகாட்டி குழுக்கான செயல்பாட்டு வழிமுறைகள், குழு உறுப்பினர்களின் பொறுப்புகள் மற்றும் அவர்களுக்கான பயிற்சிகள் மாவட்டத்தில் நடைபெறுவதை உறுதி செய்து கொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக்கல்வி இயக்குநருக்காக

23/4/24

இணைப்புகள்

1. அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உயர்கல்வி வழிகாட்டல் குழு அமைத்தல் செயல்முறைகள் (Dated:27.04.2024)
2. AY 2022-23 UMIS – EMIS Reconciliation Report Heat Map & UMIS – Higher Education Status Data of AY 2022-23 as on 08th april 2024 & AY 22-23 Enrolment Status 08 April 24
3. Toolkit for CEO, DC, KRP-DIET, BRTE-CG and Career Guidance Cell members
4. மாநில மற்றும் மாவட்ட அளவிலான பயிற்சி விவரங்கள்
5. DIET – KRPs, DCs list and NSS Nodal POs participants list
6. HM's / Teacher Counsellor's Survey Template
7. SMCs House Visit Template
8. Alumni House Visit Template
9. NSS Volunteers Survey Template
10. Training Attendance of Career Guidance Cell members
11. Annexures ( QR Codes )
12. Annexures ( Additional QR Codes )

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
நகல்
உறுப்பினர் செயலர் தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள்
சென்னை-6.- தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

## இணைப்பு – 4

**பயிற்சி அட்டவணை:**

1) மாவட்டக் கருத்தாளர்களுக்கானப் பயிற்சி

| நாள் / இடம் | பங்கேற்பாளர்கள் | பயிற்றுநர்கள் |
|---|---|---|
| 29 மற்றும் 30 ஏப்ரல் 2024, இடம் – Mother Teresa Women's University, Kodaikanal | 1. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன பயிற்றுநர்கள்<br>2. மாவட்ட உயர்கல்வி வழிக்காட்டி ஒருங்கிணைப்பாளர்<br>3. வட்டார வள மைய ஆசிரியர் ரபயிற்றுநர் (CG )<br>4. நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் | மாநிலக் கருத்தாளர்கள் (State Resource Team) |

2) உயர்கல்வி வழிகாட்டுதல் குழுவிற்கான பயிற்சி

| நாள் | பங்கேற்பாளர்கள் | பயிற்றுநர்கள் |
|---|---|---|
| 02-05-2024 முதல் 10-05-2024 வரை இடம் – அந்தந்த மாவட்டங்களில் | 1. அனைத்து மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்கள் (HM)<br>2. உயர்கல்வி வழிகாட்டுநர் பயிற்சிப் பெற்ற முதுகலை ஆசிரியர் (Career Guidance Teacher Counsellor)<br>3. பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் (SMC President and Vice President)<br>4. இல்லம் தேடிக் கல்வித் தன்னார்வலர்கள் (SMC Educationalist)<br>5. பள்ளியின் முன்னாள் மாணவர்கள் (Alumni )<br>6. நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் (NSS volunteers) | மாவட்ட கருத்தாளர்கள் |